DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.50/2022**

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 11-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 11 | தொழில் | - | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| பெயர் | - | சபரிமுத்து | வட்டம் | - | கோயம்புத்தூர் மாவட்டம் |
| த/பெ | - | அடைக்கலம் | சமயம் | - | |
| கிராமம் | - | போத்தனூர் செட்டிபாளையம் | வயது | - | 63/2025 |
| சாதி | - | | | | |

**06-11-2025**

## ( 1, 2 எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் வால்பாறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 30-09-2022-ம் தேதி பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 07-07-2021-ம் தேதி நான் வால்பாறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது வால்பாறை காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.ரதீஷ்குமார் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண் 57/2021, ச/பி. 294(b), 323, 324, 506(ii) இதச உடன் இணைந்த பிரிவு 4 TNPHW Act-ன் படி பதிவு செய்த வழக்கினை முதல் கட்ட விசாரணை முடித்து என் பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டதில் சம்பவயிடம் உதவி ஆய்வாளர் திரு. ரதீஷ்குமார் அவர்கள் பதிவு செய்துவைத்திருந்த வரைபடம் மற்றும் பார்வை மகஜருடன் ஒத்து இருந்ததால் நான் தனியாக பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்யவில்லை. சாட்சிகளை விசாரித்தபோது சாட்சிகள் உதவி ஆய்வாளர் திரு.ரதீஷ்குமார் அவர்களிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. உதவி ஆய்வாளர் திரு.ரதீஷ்குமார் எதிரிநிஷா என்பவரை கைதுசெய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். எதிரி ராஜம்மாள் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று சரணடைந்ததால் அவரை கைதுசெய்யவில்லை. இளஞ்சிறார் தர்ஷன் என்பவரை கையகபடுத்தி நீதிமன்ற சிறார் குழுமம்பத்திற்கு அனுப்பிவைத்தார். உதவி ஆய்வாளர் திரு.ரதீஷ்குமார் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றுள்ளார். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து 29-12-2021-ம் தேதி 1ம்எதிரி நிஷா என்பவர் மீது ச/பி.294(b), 324, 506(ii) இதாசாவின் படியும் எதிரி ராஜம்மாள் மீது ச/பி 294(b), 323, 506(ii) இதாசாவின் படியும் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். இளம் சிறார் தர்ஷன் மீது ச/பி.294(b), 323, 324, 506(ii) இதாசா r/w பிரிவு 4 TNPHW Act-ன் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்ற சிறால் குழுமம் முன்பு சமர்ப்பித்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இவ்வழக்கில் இளஞ் சிறார்ருக்கு எதிராக தாக்கல்  செய்த குற்ற இறுதியறிக்கையில் இவ்வழக்கு சம்பவத்தில் ஜெகன் என்பவருக்கு காயம்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஜெகனை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.  மேற்படி ஜெகன் குறித்து புகாரிலோ, 161 (3) குவிமுச படியான வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவத்திற்கு இரு குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு குற்ற எண் 57/2021-ல் சம்பவயிடம் குறித்து ஒரு பார்வை மகஜர்,  மாதிரி வரைபடம், ஒரு கைப்பற்றுதல் மகஜர் மட்டுமே தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.   இந்த வழக்கில் வழக்கு சொத்தாக ஒரு கல், ஒரு மரக்கட்டை மட்டும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 3 எதிரிகள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.  அதில் தர்ஷன் என்பவர் சிறார் என்பதால் அவருக்கு எதிராக சிறார் குழுமத்தில் ஒரு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இறுதி அறிக்கை பற்றிய விவரங்களை இந்த இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.  சிறார்க்கு எதிரான இறுதி அறிக்கையின் நகலை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.  இந்த வழக்கில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர், படிவம் 91 அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.  சிறார்ருக்கு எதிரான குற்ற இறுதி அறிக்கையுடன் மேற்படி ஆவணங்கள் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.  சிறாருக்கு எதிரான இறுதி அறிக்கையுடன் வழக்கு சொத்துக்களான கல், மரக்கட்டை, சிறார் குழுமத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தர்ஷன் என்பவர் ஒரு கட்டையுடன் ஓடிவிட்டதாக சாட்சியமளித்துள்ளார்கள்.   அந்த கட்டையை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இவ்வழக்கில் ஒரே ஒரு மரக் கட்டை மட்டும் தான் வழக்கு சொத்தாகும். அதனை இவ்வழக்கில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.  அப்படியென்னால் தர்ஷன் பயன்படுத்திய கட்டையை மட்டும் தான் இவ்வழக்கில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.  இந்த வழக்கு எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் மரக்கட்டையை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ 5 விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 காயச்சான்றிதழ் ஆகியவற்றில் அ.சா.1 கோகிலாவை ஒரு நபர் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.  மருத்துவர் 161(3) வாக்குமூலத்தில் 3 பேர் தாக்கியதாக காயம்பட்டவர் சொன்னதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.  காயச்சான்றிலும், விபத்து பதிவேட்டிலும், ஒரு நபர் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் எதன் அடிப்படையில் 3 பேர் தாக்கியதாக 161 வாக்குமூலம் கொடுத்தார் என எனது புலன் விசாரணையில் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.  இவ்வழக்கு சம்பவத்தில் காயம்பட்டதாக உள்ள ஜெகன் யார் என விசாரித்து அவர் பற்றிய விவரங்களை இவ்வழக்கு இறுதி அறிக்கையிலோ அல்லது சிறாருக்கு எதிரான இறுதி அறிக்கையிலோ தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.  முன் விரோதம் காரணமாக தவறாக கொடுக்கப்பட்ட புகாரை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் இயந்திர தனமாக எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை